# மதுரை மாநகரில் மாபெரும் பண்பாட்டுப் பெருவிழா!

## ‘மா மதுரை விழா’வினைத் தொடங்கிவைத்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, ஆக.9-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (8.8.2024) முகாம் அலுவலகத்தில் காணொலிக் காட்சி வாயிலாக, மதுரை நகரத்தின் மரபையும், பண்பாட்டையும் கொண்டாடும் “மா மதுரை விழா”வினைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையில், “மதுரையில் நடைபெறும் மாபெரும் பண்பாட்டுப் பெருவிழா இது!” என்று புகழாரம் சூட்டி வாழ்த்திப் பேருரையாற்றினார்.**

முதல்வர் அவர்கள் காணொலி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு :-

“திங்களைப் போற்றுதும்… திங்களைப் போற்றுதும்… ஞாயிறு போற்றுதும்… ஞாயிறு போற்றுதும்… மாமழை போற்றுதும்… மாமழை போற்றுதும்” என்று சிலப்பதிகாரம் தீட்டிய இளங்கோவடிகள் எழுதினார்!

### பல்வேறு வரலாற்றுப் பெருமைகள் கொண்ட மாநகர்!

இப்போது, “மா மதுரை போற்றுவோம்! மா மதுரை போற்றுவோம்!” – என்று, ‘வேள்பாரி’ தீட்டிய எழுத்தாளர் சு.வெங்கடேசன் எம்.பி அவர்கள் நிகழ்ச்சியை நடத்துகிறார். எல்லாருக்கும் அவர் அவர்களின் ஊர் பெருமைக்குரியதுதான்; போற்றுதலுக்குரியதுதான். அதிலும் குறிப்பாக, மதுரை மாநகர் என்பது பல்வேறு வரலாற்றுப் பெருமைகளைக் கொண்டது என்று நான் அதிகம் விளக்கத் தேவையில்லை.

- **இந்தியாவின் பழமையான நகரங்களில் ஒன்று மதுரை.**
- **இரண்டாயிரம் ஆண்டு வரலாறு கொண்டது மதுரை.**
- **பாண்டிய மன்னர்கள் தலைநகராக ஆட்சி செய்த நகரம்.**
- **ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியப் பாண்டியன் ஆட்சி செய்த நகரம்.**
- **“தவறு செய்தவன் மன்னனே ஆனாலும்” மன்னனைக் கண்ணகி கேள்வி கேட்ட மண் இது.**
- **நீதியைக் காக்க தன்னுடைய உயிரையே தந்த மன்னர் ஆட்சி செய்த இடம் இது.**
- **திருமலை நாயக்கரும், ராணி மங்கம்மாளும் ஆண்ட பூமி இது.**
- **புகழ்பெற்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் இருக்கும் கோயில் நகரம் இது.**
- **அனைத்துக் கலைகளும் ஒருங்கே இருக்கும் பண்பாட்டுச் சின்னமாக இந்தக் கோவில் கருதப்படுகிறது.**
- **புகழ்பெற்ற சித்திரைத் திருவிழா, மாபெரும் பண்பாட்டு விழாவாக இது நடைபெற்று வருகிறது.**
- **1866ஆம் ஆண்டே நகராட்சியாக ஆன ஊர் இது.**
- **சென்னைக்கு அடுத்ததாக இரண்டாவது மாநகராட்சியாக 1971ஆம் ஆண்டு மதுரையைதான் மாநகராட்சி ஆக்கினார், அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்.**
- **அண்ணல் காந்தி அவர்கள் தன்னை அரையாடை மனிதராக மாற்றிக்கொண்ட இடமும் இந்த மதுரைதான்.**
- **ஏன், என்னுடைய வாழ்க்கையில் மிகப் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்திய தி.மு.க. இளைஞரணி தொடங்கப்பட்டதும் இந்த மதுரை மண்ணில் இருந்துதான்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.8.2024) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மதுரை நகரத்தின் மரபையும், பண்பாட்டையும் கொண்டாடும் மா மதுரை விழாவினை தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், மதுரையிலிருந்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி பொன் வசந்த், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, பூமிநாதன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ். சங்கீதா, மதுரை காவல் ஆணையர் முனைவர். ஜெ.லோகநாதன், மாநகராட்சி ஆணையர் சி.தினேஷ்குமார், மதுரை யங் இந்தியன்ஸ் தலைவர் பைசல் அகமது, மா மதுரை விழா தலைவர் விக்ராந்த் கார்மேகம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். அதனால்தான், பல்வேறு வரலாற்றுப் பெருமைகளைக் கொண்ட நகரம் என்று மதுரையைக் குறிப்பிட்டேன். இத்தகைய மதுரையை மதுரைக்காரர்கள் மட்டுமல்ல; எல்லோரும் போற்றலாம்; ‘மதுரையைப் போற்றுவோம்’ என்று கொண்டாடலாம்!

### சிறப்பான செயல்பாடுகளால் மதுரைக்குப் பெருமை சேர்க்கும் அமைச்சர்கள்!

நம்முடைய திராவிட மாடல் அரசில் மதுரை மாவட்டத்திற்கு இரண்டு அமைச்சர்களை வழங்கியிருக்கிறோம். தங்களின் சிறப்பான செயல்பாடுகளால் இரண்டு பேரும் மதுரைக்கும், நம்முடைய அரசுக்கும் பெருமை சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

2013ஆம் ஆண்டு முதல் ‘மா மதுரை போற்றுவோம்’ விழா நடந்துகொண்டு இருக்கிறது.

> **“நம்முடைய திராவிட மாடல் அரசில் மதுரை மாவட்டத்திற்கு இரண்டு அமைச்சர்களை வழங்கியிருக்கிறோம். தங்களின் சிறப்பான செயல்பாடுகளால் இரண்டு பேரும் மதுரைக்கும், நம்முடைய அரசுக்கும் பெருமை சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். 2013ஆம் ஆண்டு முதல் ‘மா மதுரை போற்றுவோம்’ விழா நடந்து கொண்டு இருக்கிறது.”**

‘சாகித்ய அகாடமி’ விருது பெற்ற எழுத்தாளரும், மதுரை நாடாளுமன்ற உறுப்பினருமான சு.வெங்கடேசன் அவர்களின் முயற்சியால் இது தொடங்கப்பட்டது. விழாக்குழுத் தலைவராக மதுரை தியாகராசர் குழுமத் தலைவர் கருமுத்து தி. கண்ணன் அவர்களையும், விழாக்குழு துணைத் தலைவராக மதுரை அபராஜிதா குழுமத் தலைவர் முனைவர் பரத் கிருஷ்ணன் சங்கர் அவர்களையும் கொண்டு இந்த விழாக்கள் ஆண்டுதோறும் சிறப்பாக நடந்து கொண்டு வந்தது.

★ **வரலாற்றைப் போற்றுவோம்,**

★ **வைகையைப் போற்றுவோம்,**

★ மாமதுரையைப் போற்றுவோம் – போன்ற தலைப்புகளில் இது நடந்து கொண்டு வருகிறது. இந்த விழா நடக்கும் நாட்களில் மதுரை மாநகர் புத்துயிர் பெறுகிறது என்றே சொல்லலாம்.

### சிலப்பதிகாரத்தின் ‘இந்திர விழா’ போல…!

★ வைகை தொடங்கும் இடத்திலிருந்து, அது கடலில் கலக்கும் இடம் வரைக்குமான ஆற்றின் பாதை, அதன் கரைகளில் அமைந்திருக்கும் ஊர்கள் ஆகியவற்றின் மாதிரி, வைகை ஆற்றுக்குள் வடிவமைக்கப்பட்டு இருந்தது.

காலந்தோறும் மதுரை நகரம் மாறிய காட்சி ஓவியமாகவும், மாதிரி நகரமாகவும் கண்காட்சியாக தமுக்கம் திடலில் அமைக்கப்பட்டிருக்கும்.

★ மதுரை பிரமுகர்களின் படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

★ பள்ளி, மாணவ மாணவியருக்கு போட்டிகள் நடத்தப்பட்டது.

★ கருத்தரங்குகள், கலைநிகழ்ச்சிகள், ஊர்வலம், வாணவேடிக்கை ஆகியவை நடத்தப்படுகிறது.

★ இருபுறமும் விளக்குகள் ஏந்தி பொதுமக்கள் நிற்கிறார்கள்.

சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட ‘இந்திர விழா’ போல இவை நடத்தப்படுவதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதேபோல், இந்த ஆண்டும் மாமதுரை போற்றும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்று தொடங்கி 11ஆம் தேதி வரை இந்த விழாவை ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். மதுரை நகரத்தின் மரபையும், பண்பாட்டையும் கொண்டாடும் பெருவிழாவாக இதை நடத்திக்கொண்டு வருகிறீர்கள். இந்த ஆண்டு மதுரை போற்றும் விழாவை ஆர்வத்துடன் முன்னெடுத்துச் செல்லும் இந்திய தொழில் கூட்டமைப்பான C.I.I. அமைப்புடன் இளையோர் அமைப்பான “யங் இந்தியன்ஸ்” அமைப்பை பாராட்டுகிறேன். ஊரைப் போற்றும் இளைஞர்களாக நீங்கள் வளர்வது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

### பண்பாட்டுத் திருவிழாவாக நடைபெறுவது மகிழ்ச்சி அளிக்கிறது!

ஊரைப் பாதுகாக்க வேண்டும். அதன் பழமை மாறாமல் பாதுகாக்க வேண்டும். அதே நேரத்தில் நவீன வசதிகள் எல்லாவற்றையும் ஏற்படுத்தியும் தர வேண்டும். பழமைக்குப் பழமையாக, புதுமைக்குப் புதுமையாக இளைஞர்கள் இயங்க வேண்டும். பொழுதுபோக்கு விழாவாக இல்லாமல், பண்பாட்டுத் திருவிழாவாக இதை நீங்கள் நடத்திக்கொண்டு வருவது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

தமிழ் மொழி, தமிழ் இனம் என்ற பெருமையும் பெருமிதமும் உள்ளவர்களாக எதிர்காலத் தலைமுறை வளர வேண்டும்!

### மனிதநேயம் போற்றுவோம்! மக்கள் ஒற்றுமை போற்றுவோம்!

இதுபோன்ற விழாக்கள் கூட்டுறவு எண்ணத்தையும், ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற உணர்வையும் உருவாக்கும். சாதி, மத வேறுபாடுகளுக்கு இடமளிக்காமல், இதுபோன்ற பண்பாட்டு விழாக்களை எல்லோரும் கொண்டாட வேண்டும்.

மனிதநேயம் போற்றுவோம்! மக்கள் ஒற்றுமை போற்றுவோம்! என்ற அடிப்படையில் இது போன்ற விழாக்கள் மாநிலம் முழுவதும் நடைபெற வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி – மகளிர் தொண்டர் அணி இணைந்து ஆகஸ்ட்14 – அன்று பம்மலில் நடத்தும்

# கலைஞர் நூற்றாண்டு விழா வினாடி – வினா போட்டி!

### கனிமொழி கருணாநிதி, எம்.பி., பங்கேற்பு

### மாவட்டம் முழுவதிலும் இருந்து மகளிர் அணியினர் திரண்டு வரும்படி உதயா – சசிகலா வேண்டுகோள்!

*காஞ்சிபுரம்,ஆக.9-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி இணைந்து வருகிற 14-ஆம் தேதி பம்மலில் நடத்த உள்ள கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா வினாடி - வினா போட்டியில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி, எம்.பி., பங்கேற்று சிறப்பிக்க உள்ளார். காஞ்சிபுரம் மண்டல அளவில் நடைபெறும் இந்த வினாடி -வினா போட்டியை காண மாவட்டம் முழுவதிலும் இருந்து கழக மகளிர் அணியினர் - மகளிர் தொண்டு அணியினர் மற்றும் உள்ளாட்சிப் பெண் பிரதிநிதிகள் அனைவரும் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்கும்படி மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன் மற்றும் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.சசிகலா ஆகியோர் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*

*இது குறித்து அவர்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-*

*கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் வகையில், திராவிட இயக்க வரலாற்றையும்- கொள்கைகளையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் வகையில்,*

*தி.மு.கழக துணைப் பொதுச்செயலாளர் - கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி, எம்.பி., அவர்களின் முன்னெடுப்பில், கழக மகளிர் அணி சார்பில் கலைஞர் 100 வினாடி - வினா போட்டி கடந்த ஆண்டு செப்டம்பர் 16-ஆம் தேதி தொடங்கி இணைய வழியில் முதல் சுற்றுப் போட்டி நடந்து முடிந்தது.*

*தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய திராவிட இயக்க முப்பெரும் தலைவர்கள் முன்னின்று வழிநடத்திய அறிவுப் புரட்சியின் சிறப்பான வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு முன்னெடுத்துச் செல்வதே இந்த “வினாடி - வினா” போட்டியின் முதன்மை நோக்கமாகும்.*

*இந்த வினாடி - வினா போட்டி மகளிருக்காக, 18 - வயதுக்குட்பட்ட பிரிவு -18 வயதிற்கும் மேற்பட்ட பிரிவு என்ற 2 பிரிவுகளில் முதல் சுற்று நடத்தப்பட்டது,*

*இந்த இணைய வழி வினாடி - வினா போட்டியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மதிப்பெண்களை பெற்றுள்ள குழுக்கள் மண்டல அளவிலான “வினாடி - வினா” போட்டிக்கு முன்னேறி உள்ளனர்.*

*அந்த வகையில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய 3 வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய காஞ்சிபுரம் மண்டல அளவிலான “கலைஞர் 100வினாடி- வினா” போட்டி வருகிற ஆகஸ்ட் 14-ஆம் தேதி பிற்பகல் 3.00 மணி அளவில் பம்மல், இரட்டை பிள்ளையார் கோவில் சந்திப்பு அருகில் அமைந்துள்ள எஸ்.எஸ். மகால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் தா. மோ.அன்பரசன் அவர்கள் தலைமையில் இந்த வினாடி - வினா நிகழ்ச்சி நடைபெறுகிறது.*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் உதயா கருணாகரன் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.*

*மாவட்ட மகளிர் அணி தலைவர் கே.சி.சந்தியா, மாவட்ட துணைத் தலைவர் மலர்விழி தமிழ் அமுதன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மீரா சபாபதி, சி.எம்.கலைவாணி, பி.விஜயலட்சுமி, பி.வளர்மதி, வெ.பாண்டிச்செல்வி, வி.சரளா, எஸ்.தமிழரசி, எஸ்.சத்தியா மற்றும் மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர் லட்சுமி ஞானசேகர், மாவட்ட துணைத் தலைவர் கே. சாந்தி, மாவட்ட துணை அமைப்பாளர் எம்.கலாவதி, கல்யாணி மணிராஜன், ஆர்.விஜயலட்சுமி ரமேஷ், ஜி . வெ ற் றி ச் செ ல் வி , த.செண்பகவல்லி, எஸ்.சந்தியா, எஸ்.நளினி பிரியா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*கழக துணைப் பொதுச் செயலாளர் - கழகநாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, இந்த வினாடி- வினா நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.*

*கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், எம்.பி., கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி,காஞ்சி மண்டல மகளிர் அணி பொறுப்பாளர் குமரி விஜயகுமார்,கழக சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ.,இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமிமதுசூதனன், எம்.எல்.ஏ.,ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் காயத்திரி அன்புச்செழியன், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் சரஸ்வதி மனோகரன், சங்கீதா பாரதி ராஜன், நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், பேரூராட்சி தலைவர் சாந்தி சதீஷ்குமார், ஊராட்சிஒன்றியக்குழு துணைத் தலைவர்கள் சத்யா சேகர், உமாமகேஸ்வரி வந்தேமாதரம், மாலதி போஸ்கோ, நகர மன்ற துணைத் தலைவர் சித்ரா கமலக்கண்ணன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்திராணி சுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் எஸ். சசிகலா நன்றி கூறுகிறார்.*

*கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் பங்கேற்று சிறப்பிக்கும் இந்த “வினாடி- வினா” நிகழ்ச்சிக்கு, காஞ்சி வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து மாநகர - பகுதி- ஒன்றிய- நகர- பேரூர்களில் இருந்து கழக மகளிர் அணியினரும், மகளிர் தொண்டர் அணியினரும் - மகளிர் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்கும் படி அன்புடன் அழைக்கிறோம்.*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டுமொத்த கழக மகளிர் அணியினரும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பது “நமது கடமை”“நமது உரிமை” என்ற அந்த உணர்வோடு வருகிற 14-ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கெல்லாம் பம்மல் நகருக்கு திரண்டு வந்து பங்கேற்று நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கூறி உள்ளனர்.*



போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், நேற்றைய தினம் (07.08.2024), புதுதில்லியில் ”Climate & Sustainability Initiatives L ”India’s Road to Freedom: Charting India’s EVEvolution நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு, தலைமை உரையாற்றி, புத்தகம் வெளியிட்டார். நிகழ்வின்போது, ”Climate & Sustainability Initiatives நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.